# ராயல் கேர் ஆஸ்பத்திரியில் பல்துறை பராமரிப்பு மையம்!

கோவை.அக்.21

கோவை அருகேயுள்ள ராயல்கேர் ஆஸ்பத்திரியில் எம்டிசிஆர்சி மரபணு பரிசோதனை பல்துறை பராமரிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதில் தசைசிதைவு நோய் பற்றி டாக்டர் பி.ஆர்.லட்சுமி விளக்கம் அளித்தார்.

கோவை அருகேயுள்ள நீலாம்பூரில் அமைந்துள்ள ராயல்கேர் மருத்துவமனையில் எம்டிசிஆர்சி நிறுவனம் மரபணு பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பல்துறை மருத்துவபராமரிப்புமையத்தை தொடங்கியுள்ளது.

அதை கோவை அரவிந்த் கண் மருத்துவமனை தலைவர் டாக்டர் கல்பனா நரேந்திரன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

விழாவில் ராயல்கேர் மருத்துவமனை சேர்மன் டாக்டர் மாதேஸ்வரன் உள்பட டாக்டர்கள் மற்றும் மருத்துவமனை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து எம்டிசி ஆர்சி தன்னார்வ தொண்டு நிறுவனர் டாக்டர் பி.ஆர். லட்சுமி செய்தியாளர்களிடம் கூறியதாவது;

உலகம் முழுவதும் 3,500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுவதாக உலக புள்ளி விவரம் கூறுகிறது. ஆனால் உலகளவில் ஒப்பிட்டால் தமிழகத்தில் அதிகளவில் இந்த நோய் காணப்படுகிறது.

இது அரிய வகை நோய் என வரையறுக்கப்பட்டாலும் இது ஒரு புறக்கணிக்கப்பட்ட நோயாகும். இந்நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தள்ளனர்.

ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோயக்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. நாம் கற்ற அறிவியல் சமுதாயத்தை சென்றடைவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

டூஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்திற்காக இந்நிறுவனம் சேவையாற்றி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

KOVAI MALAI MURASU

(21-10-2019)